## காங்கயம் நகராட்சி

## மன்றக்கூட்டத்தாள்

**நிகழும் பிலவவருடம் தமிழ்மாதம் ஆனி 14 ஆம் நாள்ஆங்கிலவருடம் 2021 ஜுன் மாதம் 28ஆம் தேதிதிங்கட்கிழமை காலை 10.30 மணிக்குநடைபெறவுள்ளகாங்கயம் நகர்மன்றசாதாரணகூட்டம் நடவடிக்கைகள்விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் :00018/2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலைரோடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உரக்கிடங்கில் சுமார் 50 ஆண்டுகளாக இருந்த குப்பைகளை பயோமைனிங் முறையில் தரம் பிரித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. இதே போல் நகராட்சி எல்லைக்கு வெளியில் வீரணம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண். 905ல் உள்ள வருவாய்த்துறைக்கு சொந்தமான பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டு வந்த காலம் தொடர்ந்தும் 2003 முதல் 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் நகராட்சியாக செயல்ப்பட்ட காலங்களிலும் கொட்டப்பட்ட குப்பைகளின் அளவு தோராயமாக 17316$m^3$ இருக்கும். இந்த குப்பைகளை அப்புறப்படுத்தக் கோரி இப்பகுதி பொது மக்கள் கோரி வருகின்றனர். எனவே, இந்த குப்பைகளையும் பயோமைனிங் (Bio mining method) முறையில் தரம் பிரித்து அப்புறப்படுத்த மதிப்பீடு ரூ.139.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 15வது நிதிக்குழுவில் விடுவிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,10,55,714/– போக மீதமுள்ள தொகை ரூ.28,44,286/–மானியமாக வழங்கிடவும், இப்பணிக்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1823 . நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண் :1355/2018/இ1**

காங்கயம் நகராட்சியில் சென்னிமலை சாலையில் உள்ள உரகிடங்குவளாகத்தில் மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 200.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களின் செயல்முறை ந.க.எண்;26888/UGSS-2/2018 நாள்;12.11.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதிக்கேற்ப ஒப்பந்நப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்நப்புள்ளியை காங்கயம் நகர்மன்ற தீர்மான எண்;1061 நாள்;31.12.2018 ல் ஒப்புக்கொண்டு பணி உத்திரவு வழங்கப்பட்டது. பணி உத்தரவிற்க்கேற்ப ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டது. பணி நடைபெறும் இடத்தின் மண் தன்மைக்கேற்பவும், நில வாட்டத்திற்கு ஏற்பவும் முழு மதிபீட்டில் அனுமதிக்கப்பட்ட சில இனங்களில் அளவுகள் கூடுதலாக செய்ய வேண்டியுள்ளது. சில இனங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுகளைவிட குறைவாக செய்யவேண்டியிருந்தது. பணியின் முழுமையும்

உபயோகமும் கருதி இவ்வாறு ஒரு சில இனங்களில் ஏற்படும் கூடுதல்அளவுகளைஅனுமதித்துமுழுமதிப்பீட்டுதொகைக்குள்மீகாதவகையில்பணிமுடிக்கவேண்டியிருந்தது. இதுக் குறித்து மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம், திருப்பூர் அவர்களின் நேராய்வுகளின் பொழுது உரிய விளக்கம் தெரிவித்து பணியினை தொடர்ந்து மேற்க்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு தேவைகளின் அடிப்படையில் கூடுதல் அளவுகளை அனுமதித்து முழு மதீப்பீட்டு தொகைக்கு மிகாமல் செய்து முடித்ததற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1824. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:3**

**ந.க.எண். 572 /2021/பி3**

காங்கயம் நகராட்சியில் பணிபுரிந்து காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுகள் , பணி ஓய்வு பெற்றுள்ள பணியாளர்களுக்கும் மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் அனைத்து பணியாளர்களுக்கும் 2006–2007 முதல் 2020–2021 வரையிலான காலங்களுக்கு பணியாளர்களின் பிற்கால சேமநலநிதி கணக்கில் உள்ள சந்தா தொகைக்கு வட்டித் தொகை கணக்கிட்டு வட்டி பிரேரணை மற்றும் தனி நபர் ஒவ்வொருவருக்கும் இருப்பு கணக்கு சீட்டு வழங்குவதற்கும் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.2.00 இலட்சம் . மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1825. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:4**

**கோப்புஎண்.1230/2020/அ2**

காங்கயம் நகராட்சிக்குசொந்தமான31.03.2021 உடன் 9 வருடங்கள் முடிவடைந்த குத்தகை இனங்களுக்கு தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோரமுடியாத நிலையில் நகராட்சி நிர்வாகஆணையர், சென்னைஅவர்களின் சுற்றறிக்கையின்படி ந.க.எண்.5304/2021/ஆர்2, நாள்.16.03.2021 ன் படி ஏற்கனவே உள்ள பழைய வாடகை தொகை அடிப்படையிலே 3 மாதகாலத்திற்கு நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது. அதைத்தொடர்ந்து COVID 19 கொரோனா பெருந்தொற்று காரணமாக 144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் தற்பொழுதும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரமுடியாதநிலைஉள்ளது. ஏனவே நகராட்சிக்கு வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு 30.09.2021 வரைகுத்தகைகாலத்தினை 3 மாதங்களுக்குநீட்டிப்புசெய்துஉத்தரவிடமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1826. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 955/2011 /இ1**

காங்கயம் நகராட்சியில் கட்டுமானம் மற்றும் இடைவெளி நிரப்பும் திட்டம் 2011–12 ன் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலைரோட்டில் ஏற்கனவே உள்ள மயானப்பகுதியில் எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மேற்படி எரிவாயு தகன மேடையில் உள்ள LPG Firing system இயக்குவதற்கு சிலிண்டர்கள் தேவைப்படுவதை முன்னிட்டு சிலிண்டர்கள் எரிவாயு டீலர் ஸ்ரீ சிவசக்தி கேஸ் கம்பெனி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மற்றும் அதற்குண்டான தொகையை மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1827 நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 1254/2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்கு FSTP சைட்டில் பெயர்பலகை, கல்வெட்டு அமைத்தல், மற்றும் தடுப்புச்சுவர் வண்ணம் பூசுதல் பணிக்காக 26.02.2021–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. Aiga Engineers மதிப்பீட்டை விட +4.98 % அதிகம்
2. Subbaiya மதிப்பீட்டை விட +5.80 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். Aiga Engineers அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1828. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் :0353 /2021/இ1**

காங்கயம் நகராட்சி சென்னிமலை சாலையில் அமைந்துள்ள மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையத்திற்கு (FSTP) ஒப்புதல் கட்டணம் (Consent charges) 2021–2022ம் ஆண்டிற்குபுதுப்பிக்க Water மற்றும் Air Actன் கீழ் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தொகை ரூ.43,600/—யை செலுத்தமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருப்பூர் அவர்களிடமிருந்து கேட்புக் கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.43,600/—யை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1829 . நாள்.28.06.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 0852/2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு உரக்கிடங்கில் (சர்வே எண். 357) 20KLD கொள்ளளவுள்ள கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) அமைக்கும் பணிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM 2018-19) ன் கீழ் மதிப்பீடு ரூ.200.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.26888/UGSS-2/2018, நாள். 12.11.2018—ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி முழுவதும் முடிக்கப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், நகராட்சியினால் அங்கீகரிக்கப்பட்ட கழிவுநீர் உறிஞ்சு வாகன உரிமையாளர்களை அமர்த்த துணை உபவிதிகளை அமுல்படுத்த பொதுமக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனை பெற மாவட்ட அளவிலான தினசரி நாளிதழ்களில் 30 நாள் காலக்கெடுவுடன் கூடிய அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டது.

மேலும், இதே பொருள் குறித்த அறிவிப்பை பொதுமக்களின் பார்வைக்காக நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டு இருந்தது. 16.03.2021 தேதி வரை எவ்வித ஆட்சேபணையும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறாததால்,கழிவுநீர் மேலாண்மை துணை உபவிதிகளை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1830. நாள்.28.06.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் : 0563 /2021/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பயன்படும் அமராவதி குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையமான தாளக்கரையில் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 100HP HSC Pumpset ன் Panel board பழுதடைந்துள்ளது. இதனால் மாற்று மின்மோட்டார் மட்டும் தொடர்ந்து இயக்கப்பட்டு வந்தது. எனவே பழுதடைந்த Panel board க்கு பதிலாக புதிய Panel board பொருத்தி இரண்டு மின் மோட்டார்களும் இயங்கச் செய்யப்பட்டது. இப்பணி குடிநீர்

பணியாக இருப்பதால் குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் இப்பணியை உடனடியாக மேற்க்கொள்ளப்பட்டு, நகராட்சிகள் சட்டம் விதி எண் 15 ன் கீழ் பணி மேற்க்கொள்ளப்பட்டு, இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1,45,000/– (ஒரு லட்சத்தி நாட்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1831 . நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண் : 0561/2021/இ1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் திருப்பூர் அவர்களின் சுற்றறிக்கையில், நகராட்சிகளில் எரிவாயு தகனமேடையில் CCTV கேமராக்கள் பொருத்தி கண்காணிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் புதிதாக கண்காணிக்க கேமராக்கள் பொருத்தவும், பேருந்துநிலையம் மற்றும் அம்மா உணவகங்ளில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள CCTV கேமராக்கள் பழுதடைந்ததை பழுது நீக்கம் மற்றும் புதிதாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி மேற்க்கொள்ளப்பட்டு நகராட்சிகள் சட்டம் விதிகள் 15 ன் கீழ் பணி மேற்க்கொள்ளப்பட்டு, இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5.50 லட்சம்( ஐந்து லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்)மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1832. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:11**

**கோப்பு எண் :0610 /2021 /இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள தமிழ் வாழ்க பெயர் பலகையில் Neon Bulb பழுதடைந்து எரியா நிலையில் உள்ளது. அப்பெயர் பலகையில் உள்ள Neon Bulb யை LED Bulb ஆக மாற்றவும் மற்றும் பலகை முழுவதுமாக வண்ணம் பூசவும் இப்பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1833. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:12**

**கோப்பு எண் :0658 /2021 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி கூட்டு குடிநீர் திட்டங்களிலிருந்து குடிநீர் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் 7 மண்டலங்களாக 142 பிரிவுகளாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு ஏற்கனவே உள்ள குடிநீர் திட்ட பணியாளர்கள் போதுமானதாக இல்லை.இதற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்கண்டுள்ள பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.Pump Operator – 5 Nos
2.Turn Cock – 5 Nos
3.Technical Assistant – 1Nos

மேலும் பொறியாளர் ஈப்பு வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஓட்டுநர் நியமித்து பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி பணிக்கான ஒப்பந்த காலம் முடிவடையும் நிலையில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதியும் குடிநீர் பணி மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும் இப்பணிகளை தொடர்ந்து இடைவிடாமல் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்சமயம் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாது. எனவே அவசர அவசியம் கருதி ஏற்கனவே இப்பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தை 31.07.2021 வரை அதே விலை விகிதத்தில் நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1834. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:13**

**கோப்பு எண் : 0669/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் திரு.வி.க நகர் பகுதியில் கீழ்க்காணும் விபரப்படி மூன்று ஆழ்குழாய் கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தி சிறுமின்விசைப்பம்பு திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

1. திரு.வி.க நகர் ஏ.சி லாட்ஜ் அருகில்
2. திரு.வி.க நகர் விநாயகர் கோவில் அருகில்
3. திரு.வி.க நகர் வாய்க்கால்மேடு

மேற்படி சிறுமின்விசைப்பம்பு திட்டங்களிலிருந்து திரு.வி.க நகரில் 22 பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் வாய்க்கால்மேடு ஆழ்குழாய் கிணறு சிறுமின்விசைப்பம்பு திட்டத்திலிருந்து திரு.வி.க நகர் பள்ளிக்கூடம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டி மூலமாக 14 பகுதிகளுக்கும் ஏ.சி லாட்ஜ் சிறுமின்விசைப்பம்பு திட்டத்திலிருந்து ஒரு பகுதிக்கும் திரு.வி.க நகர் விநாயகர் கோவில் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து 7 பகுதிகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இது அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான தண்ணீர் விநியோகம் செல்வதில்லை.எனவே, இதனை சீரமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இதனை ஆய்வு செய்து கீழ்கண்டுள்ளவாறு விநியோக பகுதிகளை சீரமைக்கலாம்.

திரு.வி.க நகர் School அருகில் உள்ள தண்ணீர் தொட்டியிலிருந்து திரு.வி.க நகர் விநாயகர் கோவில் அருகிலுள்ள ஆழ்குழாய்கிணறு சிறுமின்விசைப்பம்பு திட்டத்திற்கு 3தெருக்களை மாற்றுதல். வாய்க்கால்மேடு ஆழ்குழாய் கிணறு திட்டத்திலிருந்து பாரதியார் வீதி இரண்டாவது பள்ளி அருகிலுள்ள 2000 லிட்டர் PVC தொட்டிக்கு தண்ணீர் ஏற்றி இதில் 5 தெருக்களை இணைத்தல். திரு.வி.க நகர் விநாயகர் கோவில் அருகிலுள்ள ஆழ்குழாய் கிணறு திட்டத்திலிருந்து ஏ.சி லாட்ஜ் அருகிலுள்ள ஆழ்குழாய் கிணறு திட்டத்திற்கு 2 தெருக்களை மாற்றி இணைப்பு வழங்குதல்.

மேலும், ஏ.சி நகர் காலணி கழிப்பிடத்தில் வைக்கப்பட்டுள்ள 2000லிட்டர் தண்ணீர் தொட்டி பழுதடைந்துள்ளது. இதனை மாற்றி புதியதாக பொருத்த வேண்டும். மேற்படி பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ.0.75 இலட்சத்திற்கு (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1835. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:14**

**கோப்புஎண்.2070/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்குசொந்தமானஆண்டு குத்தகைஇனம் டி.விவிளம்பரம்குத்தகைகாலம் 30.06.2021 உடன் முடிவடைகிறது. மேலும் குத்தகைதாரரின் விண்ணப்பத்தின் அடிப்படையில்கீழ்காணும் டி.விவிளம்பரத்தின் நடப்புகுத்தகைதொகையுடன் 5% உயர்வுசெய்துகுத்தகைகாலத்தை01.07.2021முதல்30.06.2022வரைகாலநீட்டிப்புசெய்துபுதுப் பித்துவழங்கமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகைஇனம் | உரிமைக் காலம் | ஏற்கனவேஉள்ளவாடகை | 5% உயர்வுசெய்யப்பட்டதொகை | 2021–2022 கான மாதவாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.சையது பஷீர் அகமது, டி.விவிளம்பரம் | 01.07.2021 முதல்30.06. 2022 வரை | ரூ.34,800/– | ரூ.1740/– | ரூ.36,540/– |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்படி ஆண்டு குத்தகைஇனத்தின்அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள5% உயர்த்தப்பட்டவாடகைதொகையுடன் உரிமம் புதுப்பித்துவழங்கமன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1836. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:15**

**கோப்பு எண்.00654/2021/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்டவார்டு எண்கள்.1,2,3,4,5 மற்றும் 6 ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் சாக்கடை கழிவுநீரானது சென்னிமலைரோடு மின்மயானப்பகுதிக்கு எதிரில் உள்ள கழிவுநீரின் கால்வாய் மூலம் ஒரு பகுதியும், மற்றும் பழையகோட்டைரோடு சரவணா மெடிக்கல் சென்டர் மருத்துவமனை எதிர்புறம் உள்ள கால்வாய்பகுதியிலும் மற்றும் பாரத் நகரில் இருந்து கரூர்ரோடு வரையிலும் செல்கிறது. இவ்வாறு மேற்கண்ட வார்டுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பாரத் நகர் மெயின் கால்வாயில் கலந்து செல்லும் அதில் வளர்ந்துள்ள புல்செடிகள் மற்றும் மண் அடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகள் மற்றும் அருகில் உள்ள விளைநிலங்களுக்குள் செல்கிறது. இதனைதடுக்கும் பொருட்டு ஓடையில் மண்ணை எடுத்து தரவும், அருகில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட பகுதியில் தனியார் கிட்டாச்சி இயந்திரத்தினை பயன்படுத்தி கழிவு நீர் கால்வாயினை தூர் எடுத்துசுத்தம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது. உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம்

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1837. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப்பொருள்:16**

**கோப்பு எண். 581/2021/டி2**

காங்கயம் நகராட்சி பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகளுக்கு தேவையான A4பேப்பர்கள், பிறப்பு, இறப்புசான்றிதழ்கள், கணினிக்கு தேவைப்படும் இரசீதுகள் மற்றும் பதிவேடுகள் 2021–2022–ஆம் ஆண்டிற்க்கு வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1838. நாள்.28.06.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்படுகிறது.

(ஒ/ம்) திரு.சு.மூர்த்தி
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி